பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3·50

சுடர்: 5 பிரமோதூத ஸூ ஆடி மீ 23 உ புதன்கிழமை (08-08-1990) ஹிஜ்ரி 1410 முஹர்ரம் பிறை 16 கதிர்: 158

# யாழ் நகர் மீது விமானங்கள் நேற்று முழுவதும் குண்டுமாரி!

## பத்துக்கும் அதிகமானோர் பலி!! வீடுகள், கட்டடங்கள் தரைமட்டம்!!!

யாழ்ப்பாணம், ஆக. 8

யாழ். நகரையும் அதை அண்டிய பகுதிகள் மீதும் நேற்று விமானங்கள் குண்டுமாரி பொழிந்தன. இதனால் நகரின் பெரும் பகுதி சுடுகாடாகியது.

பல கட்டடங்கள், கடைகள், வீடுகள் நொருங்கி தரைமட்டமாகின. பத்துக்கும் அதிகமான பொதுமக்கள் உடல் சிதறி உயிரிழந்தனர்.

யாழ்ப்பாணத்தில் முன் எப்போதும் இல்லாதவாறு மிகப் பெரும் விமானத் தாக்குதல்கள் நேற்று நண்பகல் முதல் மாலை வரை கண்மூடித்தனமாக நடத்தப்பட்டது.

பொம்மர்கள், அவ்ரோக்கள் மற்றும் பெரிய விமானம் ஒன்று ஆகியவற்றிலிருந்தும், ஹெலிக்கொப்டர் ஒன்றிலிருந்தும் அனேக குண்டுகள் வீசப்

(3ஆம் பக்கம் பார்க்க)

## மானிப்பாய் ஆஸ்பத்திரி மீதும் குண்டு வீச்சு! மூவர் மரணம்!!

யாழ்ப்பாணம், ஆக. 8

மானிப்பாயில் இயங்கும் யாழ். போதனா ஆஸ்பத்திரி மீதும், அதன் சுற்றாடலிலும் நேற்றுக் காலை 11. 30 மணி அளவில் பொம்மர்கள் மேற்கொண்ட தாக்குதலில் மூவர் பலியானார்கள்; ஆஸ்பத்திரிக் கட்டடங்கள் பலத்த சேதமடைந்தன.

ஒரு சில நடக்கமுடியாத நோயாளர்கள் தவிர, சகல நோயாளர்களும் வேறு இடங்களுக்குச் சென்றதால ஆஸ்பத்திரி வெறிச்சோடிக் கிடந்தது.

இரண்டு பொம்மர்களும், ஓர் அவ்ரோ விமானமும் ஆஸ்பத்திரி அமைந்திருக்கும் பகுதியில் தாக்குதல்களை மேற்கொண்டன.

நான்கு குண்டுகள் ஆஸ்பத்திரி வட்டாரத்தில் வீழ்ந்து வெடித்தன.

ஒரு குண்டு கண் சிகிச்சைப் பிரிவுக்கு மேலும்—

மற்றைய இரு குண்டுகள் மகப்பேற்று வார்ட்டுக்கும், சத்திர சிகிச்சை வார்ட்டுக்கும் இடையில் உள்ள வெளியிடத்திலும்—

நான்காவது குண்டு மானிப்பாய் தனியார் ஆஸ்பத்திரி வெளி நோயாளர் பிரிவுக்கு மேலும் விழுந்து வெடித்தன.

ஆஸ்பத்திரி வளவில் நிறுத்தப்பட்டிருந்த அம்புலன்ஸ் ஒன்றும், தனியார் கார் ஒன்றும் பலத்த சேதமடைந்தன சத்திரசிகிச்சை நோயாளர்கள் வார்ட், கிளினிக்குகள் நடைபெறும் கட்டடம் ஆகியன

[2ஆம் பக்கம் பார்க்க]

## அம்பாறையில் 40 தமிழர் படுகொலை

லண்டன், ஆக. 8

அம்பாறை மாவட்டத்தில் உள்ள தமிழ்க் கிராமம் ஒன்றில் வைத்து 40 தமிழ்ப் பொதுமக்கள் ஆயுதம் தாங்கிய முஸ்லிம் குழு ஒன்றினால் படுகொலை செய்யப்பட்டனர்.

ரெலோ இயக்கப் பிரமுகர் ஒருவர் கொழும்பில் இத் தகவலை வெளியிட்டார்.

கிழக்கிழங்கையில் கடந்த வெள்ளிக்கிழமை மாலைக்குப் பின்னர் இருநூறுக்கும் அதிகமான முஸ்லிம்கள் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

அதனையடுத்து அம்பாறையில் தமிழர் படுகொலை செய்யப்-பட்டதாகக் கூறப்பட்டது.

இதனிடையில்-

விடுதலைப் புலிகள் அல்லாத மற்றைய ஆறு தமிழ் குழுக்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் நேற்று கொழும்பில் முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகளுடன் கிழக்கு நிலைமை பற்றி பேச்சுவார்த்தை நடத்தியதாகக் கூறப்பட்டது [உ]

## பெரியகல்லாறில் திங்கள் 26 தமிழர் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், ஆக. 8

பெரிய கல்லாறு பகுதியில் கடந்த திங்களன்று 26 தமிழ் இளைஞர்கள் இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும் 6 பேரை இராணுவத்தினர் கைது செய்து முகாமுக்குக் கொண்டு சென்றிருப்பதாகவும் கூறப்பட்டது.

பெரியகல்லாறு கல்முனை இராணுவ முகாம்களிலிருந்து வந்த படையினர் பெரியகல்லாறு பகுதியை சுற்றி வளைத்தனர் என்றும் -

பின்னர் அப்பகுதியில் இருந்த இளைஞர்கள் அனை

(2 ஆம் பக்கம் பார்க்க)

## தாளங்குடா தாக்குதலில் 'பவள்' வாகனம் சேதம்

ஆரையம்பதி இராணுவ முகாமிலிருந்து கடந்த திங்களன்று ஒன்பது வாகனங்களில் களுவாஞ்சிக்குடி இராணுவமுகாமுக்குச் சென்ற இராணுவத்தினர் மீது தாளங்குடாவில் வைத்து விடுதலைப் புலிகள் கண்ணி வெடித்தாக்குதல் நடத்தினர்.

இந்தச் சம்பவத்தில் 'பவள்' கவச வாகனம் ஒன்று சேதமுற்றதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-9)

## இரவில் ஹெலித் தாக்கு

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 8

யாழ். நகரின் மேல் நேற்றிரவு 10.45 மணிமுதல் வட்டமிட்ட ஹெலிக்கொப்டர் ஒன்று சுமார் முக்கால் மணி நேரம் பரவலாக வேட்டுக்களைத் தீர்த்தது. (உ)

## அம்பலவாணர் வீதியில் ஐவருக்கு மேல் பலி

யாழ்ப்பாணம், ஆக. 8

யாழ். அத்தியடி அம்பலவாணர் வீதியில் நேற்றுக்காலை வீசப்பட்ட மூன்று குண்டுகளினால் நான்கு வீடுகள் தரைமட்டமாகின. இருபத்தைந்துக்கு அதிகமானவீடுகள் சேதமுற்றன. அப்பகுதியில் ஐந்துக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர்.

சீனத்தயாரிப்பான -4இயந்திரங்களைக் கொண்ட - பெரிய விமானமே இக் குண்டுகளை வீசியது,

அம்பலவாணர் வீதியில்

[3ஆம் பக்கம் பார்க்க]

## யாழ் இலுப்பையடி அருகே இருவர் உயிரிழந்தனர்!

யாழ்ப்பாணம். ஆக. 8

பலாலிவீதி, பருத்தித்துறை வீதி சந்திக்கும் இடத்துக்கு அருகே – இலுப்பையடிச் சந்திப் பக்கமாக – நேற்று நண்பகல் நடத்தப்பட்ட விமானத் தாக்குதல்களினால் இருவர் உயிரிழந்தனர். நான்கு பேர் காயமுற்றனர்.

அப்பகுதியில் பல கட்டடங்கள் தரைமட்டமாகின. பதினைந்துக்கும் அதிகமான வீடுகள் தரைமட்டமாகிக் கிடந்தன.

வீதியில் சைக்கிளில் வந்த இருவரே அங்கு உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்தவர்களில் ஒருவர் இலங்கைவங்கி ஸ்ரான்லி வீதிக்கிளையில் பாதுகாப்பு உத்தியோகத்தராகக் கடமை

(3ஆம் பக்கம் பார்க்க)

## திருநெல்வேலி சந்தை மீதும் நேற்று பொம்மர் தாக்கு!

திருநெல்வேலி, ஆக. 8

யாழ். திருநெல்வேலிச் சந்தைப்பகுதியில் நேற்று நண்பகல் இடம்பெற்ற விமானக் குண்டுவீச்சினால் மூவர் படுகாயமுற்றனர்.

படுகாயமுற்ற மூவரில் ஒருவர் ஆபத்தான நிலையில் இருந்தார். அவர் பின்னர் மரணமானதாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அதனை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை.

திடீரென நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலினால் திருநெல்வேலிப்பகுதி கலங்கியது.

இந்தத் தாக்குதலினால்திருநெல்வேலிச் சந்தைப் பகுதியில் ஆடியபாதம் வீதிப்பக்கமாக இருந்த பல கடைகள் பலத்த சேதமுற்றன.

[உ-143]

## மாநகரசபை கட்டடம் சேதம்

யாழ்ப்பாணம், ஆக. 8

நல்லூரிலுள்ள மாநகரசபை கட்டடம் மீதும் நேற்று மாலை 5 15 மணியளவில் பொம்மர் தாக்குதல் நடத்தப்பட்டது. மாநகரசபை கணக்காளர் பிரிவு சேதமடைந்தது.

அலுவலகத்தில் இருந்த பொருள்கள் வெளியே தூக்கி வீசப்பட்டுக்கிடந்தன. மாநகர சபை வளவுக்குள் நின்ற தென்னை மரங்கள் சிலவும் முறிந்து வீழ்ந்தன.

அதேவேளை நல்லூர் கோவிலுக்கு முன் வீதியில் சென்று கொண்டிருந்த வாகனத்தை நோக்கியும் ரொக்கட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. (ஒ-10)

## 4 பொம்மர்கள் நேற்று காரைநகரில் குண்டுவீச்சு!

யாழ்ப்பாணம், ஆக. 8

காரைநகர்ப் பகுதியில் நேற்றுக் காலை சுமார் 9.45 மணியளவில் நான்கு பொம்மர்கள் பலத்த குண்டுத்தாக்குதல்களை நடத்தின.

ஊர்காவற்றுறை இறங்குதுறை காரைநகர் இறங்குதுறை, இரண்டையும் இலக்கு வைத்தே தாக்குதல்கள் மேற் கொள்ளப் பட்டன.

சீநோர் கட்டடமும் சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-10-5-3)

**வாசகர் கவனத்துக்கு!**

நேற்று யாழ். நகரில் நிலவிய சூழ்நிலை காரணமாக இன்றைய உதயன் நான்கு பக்கங்களுடனேயே வெளிவருகின்றது

-நிர்வாகிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

04 - 07 - 90 வட்டுக்கோட்டையில் சிறிய பையுடன் பணம், செபமாலை தவறிவிட்டது. பணம் தவிர்த்தி செபமாலையை உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். அ. மரியாம்பிள்ளை சட்டத்தரணி, 88, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

(13619)

தபால் கட்டை சந்தி மார்கட் கந்தசாமியின் மரக்கறிக் கடையில் ஒரு மூக்குக் கண்ணாடி, இரு செபப்புத்தகங்கள் உட்பட வேறு சில பொருட்களுடனும் கைப்பாக் தவறிவிட்டது. தவறுதலாக எடுத்தவர்கள் மேல் கண்ட முகவரியில் அல்லது அ. எட்வேட் முல்லி வீதி, அரியாலையில் ஒப்படைக்கும்படி தயவாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

(13999)

### Typewriters

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும் மற்றும் தமிழ் ஆங்கிலம் ரைப்பிங் செய்துகொடுக்கவும் Fudo Enterprises (Shiva Studio Upstair) Jaffna Road, Manipay. (சி-5289)

### அகதிகள் புனர்வாழ்வு கழகம்

பச்சிலைப்பள்ளி, ஆக 8

பச்சிலைப்பள்ளி அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் அண்மையில் பளை மகாவித்தியாலயத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

[ஓ-117]

# பாகிஸ்தானில் அவசர கால நிலை

# கேந்திர இடங்களில் துருப்புகள்

## பதவி நீக்கம் சதி என்கிறார் பெனாசிர்

இஸ்லாமபாத், ஆக. 8

பாகிஸ்தானில் அவசரகாலச்சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

தலைநகர் இஸ்லாமபாத்தில் உள்ள அரசு வானொலி டெலிவிஷன் நிலையங்கள், தகவல் திணைக்களம் ஆகியவற்றின் பாதுகாப்பு இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பிரதமர் பெனாசிர்பூட்டோ பதவி விலக்கப்பட்டதைத் தொடர்ந்து ஜனாதிபதி குலாம் இஷாக்கான் இந்த நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்.

பாகிஸ்தானில் உள்ள நான்கு மாகாண சட்டசபைகளும் ஜனாதிபதியால் கலைக்கப்பட்டுவிட்டன.

இம் மாநிலங்களுக்கு காபந்து முதலமைச்சர்களை ஜனாதிபதி நியமித்திருக்கிறார்.

பாகிஸ்தான் நாடாளுமன்றக் கலைப்பு விவகாரம் குறித்து ஆர்ப்பாட்டப் பேரணிகளை நடத்துவதற்கு இடமளிக்கப்படமாட்டாது என்றும் அவை நசுக்கப்படும் என்றும் ஜனாதிபதி டெலிவிஷன் உரை ஒன்றில் தெரிவித்தார்.

வெளிநாட்டு ஆக்கிரமிப்பு அச்சுறுத்தல், உள் நாட்டில் பதற்ற நிலைமை காரணமாக திறமையற்ற ஓர் ஆட்சியை நீடிக்க விடக் கூடாது என்பதால் பெனாசிர் அரசு கலைக்கப்பட்டதாகவும் ஜனாதிபதி குலாம் இஷாக்கான் தெரிவித்தார்.

இதனிடையே தான் பதவி நீக்கம் செய்யப்பட்டது ஜனாதிபதி குலாம் இஷாக்கான் நடத்திய சதி என்று பெனாசிர்பூட்டோ செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

(இ - எ)

## ஆயர் கண்டனம்

கொழும்பு, ஆக. 8

காத்தான்குடி படுகொலைச் சம்பவத்தை மட்டக்களப்பு ஆயர் அதிவண. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை கண்டித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறார்.

உடன் யுத்த நிறுத்தம் வேண்டும் என்றும் ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை கேட்டிருப்பதாக கொழும்புக்கு கிடைத்த செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

(இ-எ)

## நினைவஞ்சலி

திரு. நவரட்ணம் சிவசிதம்பரம்

தோற்றம்: 15 — 08 — 1926 மறைவு: 29 — 06 — 1990

திரு. இராஜா ஸ்ரீபிரபாகரன்

தோற்றம்: 22 — 05 — 1962 மறைவு; 07 — 07 — 1990

உங்கள் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

உங்கள் நினைவால் துடிக்கும்:

— குடும்பத்தினர்

[13618]

## விமானத் தாக்குதலை நிறுத்துமாறு கோரிக்கை

சென்னை, ஆக. 08

இலங்கைத் தமிழர் பிரதேசங்களில் விமானத் தாக்குதல் நடத்தி மக்களைக் கொல்வதை தடுத்து நிறுத்தும்படி இலங்கை அரசை இந்திய அரசு வற்புறுத்த வேண்டும்.

தமிழ் நாடு சுதந்திரப் போராட்ட வீரர்கள் சங்கம் இப்படிக் கோரியுள்ளது.

## ● இவர்களும் கப்பலில் கொழும்பு செல்ல வசதி

யாழ்ப்பாணம், ஆக. 8

யாழ்ப்பாணத்தில் உள்ள வெளிநாட்டுப்பல்கலைக் கழகங்களில் கல்வி பயிலும் மாணவர்களையும், வெளிநாட்டில் வேலை செய்பவர்களையும் அழைத்துச்செல்ல நாளை வியாழக்கிழமை ஒரு பயணிகள் கப்பல் பருத்தித்துறைக்கு வரவிருக்கிறது.

''லங்கா சிறி'' என்னும் அந்தக்கப்பல் ஏற்கனவே கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிநாட்டுப் பாஸ்போர்ட்காரரை மட்டும் கொழும்புக்கு அழைத்துச் சென்றது.

நாளை வரும் கப்பலில் கொழும்பில் உள்ள தமிழ் அகதிகளும் அழைத்து வரப்படலாம் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்தக் கப்பலில் உணவுப் பொருள்களும் வருகின்றன.

(ஓ-3)

### பெரியகல்...

(1ஆம் பக்கத்தொடர்ச்சி)

வரையும் குறிப்பிட்ட ஒரு இடத்துக்கு அழைத்துச் சென்றனர் என்றும் -

அப்போது அந்த இளைஞர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

### மானிப்பாய்....

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

வும் பலத்த சேதத்திற்கு உள்ளாகின. கண்ணாடிகள், கதவுகள் நொருங்கிக் காணப்பட்டன; மரங்கள் முறிந்து கிடந்தன.

மரத்தின் கீழ் நிறுத்தப்பட்டிருந்த சைக்கிள் ஒன்று 50 யார் தூரத்துக்கு தூக்கியெறியப்பட்டு மரக்கொப்பில் சிக்கிக் கிடந்தது.

சில நோயாளர்கள், சிறு காயங்களுக்குள்ளானார்கள். ஆஸ்பத்திரித் தாதி ஒருவரும் காயமடைந்தார்.

ஆஸ்பத்திரிக்கு முன்பாக விழுந்து வெடித்த குண்டுகளினால் ஆறு கடைகள் சேதம் அடைந்தன.

ஆஸ்பத்திரிக்கு முன்னல் கடலை வியாபாரம் செய்து கொண்டிருந்த - யாழ். மனோகராத் தியேட்டர் சந்தியைச் சேர்ந்த - திருமதி செட்டியார் (65 வயது) என்பவர் அந்த இடத்திலேயே பலியானார்.

அப் பகுதியில் உள்ள கடை ஒன்றில் வேலை செய்து வந்த சைமன் என்ற சிங்களவரும் பலியானார்.

மற்றொரு சடலம் சதைக் குவியலாகக் காணப்பட்டது. அது யாருடைய சடலம் என்பது தெரியவரவில்லை.

(உ-3-10-5)

## மக்கள் வங்கி அறிவித்தல்

யாழ். நகரில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக நேற்று திங்கட்கிழமை (07- 8 1990) முதல் எதிர்வரும் 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை மக்கள் வங்கியின் யாழ். நகரக்கிளைகள் (ஸ்ரான்லி வீதிக்கிளை, நவீன சந்தைக் கிளை, பிரதான வீதிக் கிளை, கன்னாதிட்டி கிளை, பிரதேச காரியாலயம்) தற்காலிகமாக மூடப்பட்டிருக்கும் என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

15 08-1990 அன்று வங்கிக்கு சமுகம் தரும்படி மேற்படி கிளைகளில் பணியாற்றும் ஊழியர்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

நிலைமையை பரிசீலித்து வங்கி திறப்பது குறித்து மறு அறிவித்தல் பின்னர் வெளியிடப்படும்.

பிரதேச காரியாலம்,
மக்கள் வங்கி,
யாழ்ப்பாணம்.

[சி-5152]

## முதலாம் வருட நினைவு அஞ்சலி

எட்வின் றெஜினோல்ட் கிறிஸ்ரோபர்

(ஓய்வுபெற்ற இராணுவ உத்தியோகஸ்தரும், ஒய்வு பெற்ற மக்கள் வங்கி பாதுகாப்பு உத்தியோகஸ்தரும்)

அன்பினால் எம்மை ஆட்சி செய்து
ஆலவிருட்சமாய் எங்களுக்கு நிழல் தந்து
ஈகைக்கு இலக்கணமாகத் திகழ்ந்து
ஊர் உலகிற்கும் உறவினர்க்கும் உத்தமராய் வாழ்ந்து
பாசத்துடன் எமை வளர்த்து
பாதியிலே எம்மையெல்லாம் விட்டு சென்ற
எங்கள் அணையாத சோதி என்றும் எளிமையான
றெஜி என்ற உங்கள் நாமம்
ஓயாது ஒலிக்குதையா செவிகளிலே
ஓடி மறைந்ததையா ஒரு வருடம்

பாதியிலே பறி கொடுத்த மனைவி, பாசத்தை உணர முன்னே உங்களை இழந்த மக்கள், மற்றும் சகோதர சகோதரிகள், மைத்துனர், மைத்துனிமார், உற்றார், உறவினர்கள்.

தகவல்:
மனைவி, மக்கள்.

மானிப்பாய் வீதி,
உடுவில்.

[13616]

## 31 ஆவது நிறைவு நாள் அஞ்சலி



### திருமதி தம்பு பொன்னம்மா

[முன்னாள் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை ஊழியர்]

மலர்வு: 12 - 03 - 1928 மறைவு; 09 - 07 - 1990

அன்பின் தெய்வமே எம்மையெல்லாம் ஆறாத் துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்டதேன் அம்மா.

அம்மா, ஐயா காலமாகி பத்து மாதம் தான். அதற்குள் உங்களையும் தன்னோடு அழைத்து எம் எல்லோரையும் தனியாக தவிக்க விட்டு சென்றீர்களோ. இப்படி எங்களை கலங்க விட்டு பிரிவீர்கள் என்று எண்ணி இருந்தோமா அம்மா. இனி உங்கள் முகம் எப்பொழுது நாம் காண்போம் அம்மா.

09 - 07 - 1990 அன்று நடைபெற்ற அன்னாரது இறுதிக் கிரிகைகளில் கலந்து கொண்டோருக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும் நன்றி தெரிவிப்பதோடு 08 - 08 - 1990 இன்று அன்னாரது இல்லத்தில் நடைபெறும் கிரியையில் கலந்து கொண்டு அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

இங்ஙனம்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கிறேசர் லேன்,
தெல்லிப்பழை கிழக்கு,
தெல்லிப்பழை.

13835]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தமிழரைப் பாதுகாக்க உணர்வுபூர்வமாக ஒன்றுபடுவீர்!

## தமிழக அரசியல் கட்சிகளுக்கு கருணாநிதி அறைகூவல்

இலங்கையில் தமிழ் மக்கள் தொடர்ந்து இன்னலுக்குள்ளாகிவருவதைத்தடுத்துநிறுத்திட மனிதநேய அடிப்படையில் தமிழகத்தில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றுசேர வேண்டும் என்று தமிழக முதல்வர் திரு. மு. கருணாநிதி அழைப்பு விடுத்தார்.

மதுரையில் நடந்த ஒருகூட்டத்தில் பேசிய அவர், இலங்கைத் தமிழர் அழிவைத் தடுத்து நிறுத்திடும் வகையில் தமிழகம் செயற்படத் தவறினால் நாளைக்கு தமிழகத்துக்கே அந்த ஆபத்து வந்துவிடும் எனவும் எச்சரித்தார்.

அவர்மேலும் கூறியதாவது:

இலங்கையில் படுகொலை செய்யப்படும் தமிழர்களைக் காப்பாற்றுகின்ற பெரும் பொறுப்பு இங்கே வாழ்கின்ற எல்லாத் தமிழர்களுக்கும் உண்டு.

'இலங்கையில் வாழும் தமிழர்கள்' என்று சொல்லக்கூட இன்றைக்கு நமக்கு நாகூசுகிறது. இலங்கையில் வாழ்கின்ற என்று சொல்ல இயலவில்லை. 'இலங்கையில் நாள்தோறும் செத்துக்கொண்டிருக்கிற தமிழர்கள்' என்று சொன்னால்தான் இன்றுள்ள சூழ்நிலையில் பொருத்தமாக இருக்கும்.

### ஈழத்தமிழரின் அறிக்கை

அதுமட்டுமல்லஇலங்கையில் இருக்கிற தமிழர்களில் சிலர் கூட என்னைத் தாக்கியும், என்னைத் தலைவராகக் கொண்டுள்ள தி. மு. கவைத் தாக்கியும், என் தலைமையில் நடக்கும் ஆட்சியைத் தாக்கியும் அறிக்கை விட்டிருக்கிறார்கள்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் கருணாநிதி தலையிடக்கூடாது; அவர் ஒரு தலைப்பட்சமாக விடுதலைப் புலிகள் பக்கம் பேசுகிறார் என்று ஈ. என். டி. எல். எவ். என்ற இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் கடுமையாக என்னைக் கண்டித்து இருக்கிறார்கள்.

அண்மையில் நான்கு, ஐந்து மாதங்களுக்கு முன்பு நான் சட்டசபையில் அறிவித்தேன் தமிழக கடற்கரை ஓரத்தில் உச்சிப்புள்ளியில் புதைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. ஏறத்தாழ 4 கோடி ரூபா மதிப்புள்ள பயங்கர ஆயுதங்கள் மீட்கப்பட்டன. அந்த ஆயுதங்கடார்கள். ளுக்குச் சொந்தக்காரர்கள் ஈ. என். டி. எல். எவ். இயக்கத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் இலங்கையிலிருந்து தங்களை தமிழர்கள், தமிழ்ப் போராளி குழுவினர் என்று கூறிக்கொண்டு, தமிழகத்தில் நடக்கும் அரசுக்குஅறைகூவல் விடுத்து அறிக்கை விடுகிறார்கள் என்றால் அவர்களைத் தூண்டிவிட்டு அறிக்கைவிடச் செய்யும் சக்தி எது என்று எனக்கு நன்றாகத் தெரியும்.

### தமிழகத்தைத் தாக்குகிறார்களா?

இந்தச் செயலில் இலங்கை அரசு ஈடுபடுமேயானால் அவர்கள் மறைமுகமாக இந்தியநாட்டின் தென்கோடி முனையில் இருக்கும் தமிழகத்தில் ஒருவகையாக தாக்கத் தொடங்குகிறார்கள் என்று அர்த்தம். அது இந்தியாவைத் தாக்குவதாக அர்த்தம் என்பதை அவர்கள் புரிந்துகொள்ளவேண்டும். யாரோ சிலரைத் தூண்டிவிட்டு அறிக்கை விடுவதன்மூலம், அச்சுறத்துவதன்மூலம் இங்கே இருக்கின்ற தமிழர்கள் உணர்வு இழந்துவிடமாட் அடிபட்டு, காயப்பட்டுள்ளோரில் இறந்தவர்கள்போக மிச்சம் இருப்போர் தமிழகத்துக்கு வருகிறார்கள். அவர்களுக்கு தமிழகத்துக்கு வருவதைத்தவிர வேறு வழியில்லை.

### பிரதமரிடம் முறையிட்டேன்

இலங்கையில் அடிபட்டுக் கொண்டிருக்கும் தமிழர்களை



காப்பாற்றவேண்டும். அதற்கு இந்திய மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழக அரசு சார்பில் நான் டில்லிக்கு நேரடியாகச் சென்று பிரதமரிடம் முறையிட்டேன். அதனையடுத்து ஆயுத பலத்தின் காரணமாக அப்பாவித் தமிழ் மக்களை விமானம் மூலம் வெடிகுண்டுகளை வீசி தாக்கி அழிப்பதை வேதனையோடு கவலையோடு கவனிக்கிறோம்-என்ற கருத்தமைந்த அறிக்கை மத்திய அரசால் வெளியிடப்பட்டது.

அதற்குப் பிறகும் தாக்குதல் ஓயவில்லை என்றபோது மீண்டும் பிரதமரோடு தொடர்பு கொண்டேன். மேலும் நிலைமை மோசமாகுமேயானால் தமிழகஅரசு மீண்டும் மத்திய அரசை வலியுறுத்தும்.

செத்துக் கொண்டிருக்கின்ற தமிழர்களைக் காப்பாற்றியே தீர வேண்டும் என்று மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்ல தமிழக அரசு தயங்காது.

ஈழத் தமிழர் பிரச்சினையில் நியாயபூர்வ உணர்வுடன் செயற்பட்டுக் கொண்டிருக்கும் தமிழக அரசைக் கலைக்க வேண்டும் என்று ஒரு சாரார் கூறுகின்றார்கள்.

### வேதம் ஓதும் வேங்கை

இலங்கைப் பிரச்சினைக்காக ஒரு ஆட்சி கலைக்கப்படவேண்டும் என்றால் ராஜீவ்காந்தி ஆட்சி ஆயிரம் முறை கலைக்கப்பட்டிருக்க வேண்டும். இந்தியப் படையை விட்டு தமிழர்களைக் கொன்ற காங்கிரஸ்காரர்கள், இன்று சிங்களப் படையினர் தமிழர்களை கொல்கின்றனர் என்று ஓலம் இடுவது, மானை அடித்த வேங்கை, வாயில் ரத்தத்தோடு வேதம் ஓதுவது போல இல்லையா?

இந்தப் பிரச்சினையில் தமிழகத்தில் உள்ள எல்லா தமிழர்களும், இந்த மண்ணில் பிறந்த அத்தனை பேரும், இலங்கையில் நடக்கின்ற கொடுமையைக் கண்டிக்க ஒன்றுசேர வேண்டும். மனித நேயத்தோடு, சம உணர்வோடு வாரீர் என அழைக்கின்றேன். அவர்கள் எந்த கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் பக்கத்து நாட்டில் தமிழினம் அழிந்து கொண்டிருக்கிறது என்ற நிலைமையை தவிர்த்திட, காப்பாற்றிட அன்பு அழைப்பு விடுக்கின்றேன்''

இவ்வாறு கருணாநிதி பேசினார்.

### நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

**மண்ணை விடுவிக்க வழிசெய்குவாய்**

எடுப்பு

எடுத்த உரிமைப் போரை அடுத்து எங்கள் மண்ணை
விடுவிக்கவொரு வழிசெய்குவாய் நல்லூரா!- எம்மை
முடுக்கி நீ முன்னேற்றுவாய்
(-எடுத்த)

தொடேப்பு

தொடுத்த பகையை வென்று சுதந்திரம் பெற்று
-வாழ்ந்து
அடுத்ததலை முறையோங்க முருகையா - நீயுன்
ஆசிகள் பல கூறுவாய்
(எடுத்த)

முடிப்பு

முடிக்கும் பணிகளெல்லாம் முன்னேறித் தமிழ்மண்
துடிக்கும் உணர்வோடு துலங்கியிந்த வையமெல்லாம்
படிக்கும் வரலாற்றைப் பக்குவமாய்(ப்) படைத்தறத்தை
வடித்துச் சுவைப்பதற்காய் வைத்திடவே அருள்வாயே.
(எடுத்த).

—முருகனடியான்

(இன்று நல்லூர் கந்தசுவாமி ஆலய 13ஆம் திருவிழா)

### கூட்டம்

யாழ்ப்பாணம், ஆக. 8

அனைத்துப் பாடசாலைகளையும் சேர்ந்த விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க உறுப்பினர்களின் கூட்டம் நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

சகலரையும் தவறாது சமுகம் அளிக்கும்படி விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம் கோரி உள்ளது. (இ)

## வரதரின் மனைவி வீடும் சேதம்

குருநகர், ஆக. 8

கடந்த சனிக்கிழமை இரவு யாழ். நகரில் நடத்தப்பட்ட விமானக் குண்டு வீச்சில் குருநகர் கடற்கரைவீதியில் உள்ள வடக்குக்கிழக்குமாகாண முன்னாள் முதல்வர் வரதராஜப்பெருமாளின் மனைவியின் வீடும் சேதமடைந்தது.

வீட்டில் வரதராஜப்பெருமாளின் உறவினர் எவரும் இருக்கவில்லை. வாடகைக்கு வேறு குடும்பம் இருந்து வந்தது. (இ-51)

### யாழ்-இலுப்பை----

யாற்றும் வஸ்தியாம்பிள்ளை வரததாசன் [வயது 34].

ஆரியகுளம் சந்திக்கு அண்மையில் - நாகவிகாரைக்குப் பின்புறமாக - இருந்த தனியார் கல்வி நிறுவனம் ஒன்றும் விமானக் குண்டுவீச்சினால் பலத்த சேதமுற்றது.

ஆஸ்பத்திரி வீதியில்வேம்படிச்சந்தி, அதற்கு அருகே உள்ள இடங்கள், பருத்தித்துறை வீதியில் 4ஆம் குறுக்கு ஒழுங்கை ஆகியவற்றிலும் நேற்று விமானக் குண்டுகள் விழுந்து வெடித்தன. இதனால் அப்பகுதிகளில் இருந்த பல கட்டடங்கள் தகர்ந்தன. [உ-143-10]

### யாழ்நகர்...

(1ஆம் பக்கத்தொடர்ச்சி)

பட்டன.

பாரிய அளவுடைய - அதிக தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய குண்டுகள் மாறி மாறி நகரின் பல பகுதிகள் மீதும் வீசப்பட்டதால் யாழ் நகர மக்கள் கதி கலங்கினர். பெரும் சத்தத்துடன் வெடித்த இந்தக் குண்டுகளினால் யாழ். நகரம் அதிர்ந்தது.

குண்டுகள் வீழ்ந்து வெடித்த இடங்களில் - தகர்ந்த கட்டடங்களின் தூசுகள் - புகையாக மேலே கிளம்பியதையும் காண முடிந்தது.

நாலா புறமும் வெடித்துச் சிதறிய குண்டுகளினால் கிலி கொண்ட மக்கள் நகரப் பகுதியை விட்டு ஓட்டமும் நடையுமாக வெளியேறிக் கொண்டிருந்தனர்.

எங்கு செல்வது என்று தெரியாத நிலையில் நகரத்தை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கும் மக்கள் கூட்டத்தைக் காணக்கூடியதாக இருந்தது.

நேற்று மாலை வரை இந்தத் தாக்குதல்கள் நீடித்தன. [உ]

### அம்பலவாணர்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டு வீடுகளை இலக்கு வைத்து குண்டுகள் வீசப்பட்டதாக அனுமானிக்கப்படுகிறது.

இக் குண்டுகள் காற்றைக் கிழித்துக்கொண்டு சத்தத்துடன் வந்து விழுந்து பெரும் அதிர்வுடன் வெடித்தன. குண்டு விழுந்த இடத்தில் இருந்த வீடுகள் தரைமட்டமாகின.

வீடு ஒன்றில் சேதமுற்ற ஓடுகளை திருத்திக்கொண்டிருந்தசிலர் அந்தஇடத்திலேயே உயிரிழந்தனர். வீதியால் வண்டி ஒன்றைத் தள்ளிச் சென்ற வயோதிபர் ஒருவரும் பலியானார். அப்பகுதியில் வந்துகொண்டிருந்த மில் முதலாளி ஒருவரும்உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

அப்பகுதியில் மனித உடற்பகுதிகள் திக்குத் திக்காகச் சிதறிக் கிடக்கக் காணப்பட்டன. அப்பகுதி மயானம் போல் காட்சியளித்தது.

உடல்கள் சின்னாபின்னமாகி சிதறிக் கிடந்ததால்உயிரிழந்தோரின் எண்ணிக்கை சரியாகக் கணக்கிடமுடியாமல் இருந்தது.

அம்பலவாணர் வீதியில் மற்றொரு வீடும் தரைமட்டமானது. இந்த வீட்டிலும் இருவர்உயிரிழந்தனர். [உ-10 5]

# யுத்தத்தை நிறுத்த பேச்சு நடத்துக! 16சர்வதேச அமைப்புகள் கோரிக்கை

## பிரபா, பிரேமா இருவருக்கும் விடுக்கப்பட்டது

கொழும்பு, ஆக. 8

வடக்கு-கிழக்கு யுத்தத்தை நிறுத்தி பேச்சுக்களை உடனடியாக ஆரம்பிக்கும் படி ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த 16 அரசு சார்பற்ற அமைப்புக்கள் ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கும் விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. பிரபாகரனுக்கும் கூட்டாக வேண்டுகோள் ஒன்றை விடுத்து உள்ளன.

ரெட்பானா, நோராட், போரூட், பிரிட்டிஷ் அகதிகள் நிறுவனம், நோவிப், இன்டராக்ட் அலேட் போன்றவை இந்த அமைப்புக்களில் சில ஆகும்.

வடக்கு-கிழக்கில் இன்று ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டை நிலைக்கு ஏதுவான தகராறுகளுக்கு தீர்வுகாண ஐ.நா பொதுச் செயலாளரின் உதவியை நாடுமாறும் இந்த அமைப்புக்கள் ஜனாதிபதி பிரேமதாஸாவைக் கேட்டுள்ளன.

இந்த யுத்தத்தில் அப்பாவிப் பொதுமக்களே பெரும்பாலும் பாதிக்கப்படுவதால் மனித நேய அடிப்படையில் இந்த வேண்டுகோளை விடுப்பதாகவும் இந்த அமைப்புகள் தமது வேண்டுகோளில் கூறியுள்ளன.

இந்த அமைப்புக்கள் இவ்வாறான கோரிக்கை ஒன்றை விடுத்து இருப்பது இதுவே முதல் தடவை ஆகும்.

இந்த அமைப்புக்களில் பெரும்பாலானவை 1983ஆம் ஆண்டு இனக் கலவரத்தின் பின்னர் பாதிக்கப்பட்ட அகதிகளின் புனர்வாழ்வு, புனரமைப்பு பணிகளைக் கவனித்து வருவது குறிப்பிடத்தக்கது. (இ-எ)

# விமான, ஷெல் தாக்குதல்களை உடன் நிறுத்தக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஆக. 8

யாழ். மாவட்டத்தில் அப்பாவி மக்கள் கொல்லப்படுவதைத் தவிர்க்க உடனடியாக விமானத் தாக்குதல்களையும், ஷெல் தாக்குதல்களையும் உடனடியாகநிறுத்த வேண்டும் என்று யாழ். அரச அதிபர் ஊடாக ஜனாதிபதிக்கு யாழ். பிரசைகள் குழு அவசர கோரிக்கையை விடுத்துள்ளது.

நேற்று யாழ். அரசஅதிபர் திரு. அன்ரன் அல்பிரட்டை பிரசைகள் குழுப் பிரமுகர்கள் சந்தித்து இது தொடர்பான மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்தனர். [உ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநெல்வேலியில் நள்ளிரவு ஹெலி தாக்கி ஒருவர் பலி

திருநெல்வேலி, ஆக. 8

திருநெல்வேலியில் பல்கலைக்கழகத்துக்கு சமீபமாகவுள்ள வளாக வீதியில் திங்கட்கிழமை இரவு 12.15 மணியளவில் ஹெலியில் இருந்து மேற்கொள்ளப்பட்ட ரொக்கட் தாக்குதலில் ஒருவர் அந்த இடத்திலேயே மரணமானார். மற்றும் ஒருவர் பலத்த காயமடைந்தார்.

மரணமானவர் செல்லத்துரை நவசோபன் (வயது33). காயமடைந்தவர் தம்பிஐயா தர்மராஜா (வயது23).

அதே ஹெலி பல்கலைக்கழக மருத்துவபீட வளவுக்கு அருகாமையில் உள்ள றோமன் கத்தோலிக்க தேவாலயப் பகுதியை நோக்கியும் தாக்குதல் நடத்தியது. தேவாலயத்தில் அகதியாய் இருந்தவர்களில் ஆறுபேர் காயமடைந்தனர்.

தேவாலயத்தின் வெளிப்புறமும் சேதமடைந்தது.

(ஒ-143-10)

## திருமலையில் ஊரடங்கு

கொழும்பு, ஆக. 8

திருகோணமலை மாவட்டத்தில் காலவரையறையற்ற ஊரடங்குச் சட்டம் கடந்த திங்கட்கிழமை முதல் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கிழக்கில் கடந்த நான்கு தினங்களில் 200 முஸ்லிம்கள் வரையில் கொல்லப்பட்டதை தொடர்ந்து இந்த ஊரடங்குச் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-எ)

## அமெரிக்கா - இஸ்ரேல் ஈராக் மீது படை எடுக்கும்?

பக்தாத், ஆக. 8

அமெரிக்காவும் இஸ்ரவேலும் ஈராக் மீது படை எடுக்கக்கூடும் என அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டிருக்கின்றனர்.

தனது நாட்டின் மீது திடீர்த் தாக்குதல் ஒன்று நடைபெறலாம் எனக் கருதி ஈராக் ஜனாதிபதி சத்தாம் ஹுசேன் பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்.

இராணுவத்திற்கு அவசரமாக தொண்டர்களைச் சேர்க்கும் வேலை ஆரம்பமாகியுள்ளது.

தலைநகர் பக்தாத், பஸ்ரா ஆகிய இடங்களில் இருந்து பெரும் எண்ணிக்கையில் மக்களை நாட்டின் வேறு பகுதிகளுக்கு அனுப்பி வைப்பதிலும் ஈராக் அரசு ஈடுபட்டுள்ளது.

(உ-எ)

## ஹெலி தாக்குதல்

கொழும்புத்துறை, ஆக. 8

கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலய அகதி முகாம் பகுதியில் திங்கட்கிழமை நள்ளிரவு ஹெலிக்கொப்டரில் இருந்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் எவரும் காயம் அடையவில்லை.

# யுத்த நிறுத்தம் என்ற பேச்சே வேண்டாம் என்கிறார் ரஞ்சன்

கொழும்பு, ஆக 8

நாடாளுமன்றத்தில் யுத்த நிறுத்தம் பற்றி இப்பொழுது எவரும் பேசக்கூடாது.

இவ்வாறு பாதுகாப்புத் துணை அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்னா நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

காத்தான்குடிப் படுகொலைச் சம்பவங்களால் மக்கள் ஆத்திரமடையக் கூடாது; பொறுப்புணர்ச்சியுடன் நடந்து கொள்ள வேண்டும்.

அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் தீவிரவாதிகள் இன்று மறைந்திருந்து தான் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

கிழக்கில் தீவிரவாதத்தை ஒழிப்பதற்கு முஸ்லிம் மக்கள் படையினருக்கு உதவியாக இருந்து வந்திருக்கிறார்கள். தொடர்ந்தும் அவர்கள் உதவ வேண்டும் — என்றார்.

**சிறிமாவின் அறிக்கை**

எதிர்க்கட்சித் தலைவியான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா காத்தான்குடி கொலைச் சம்பவம் பற்றி அறிக்கை ஒன்று வெளியிட்டார்.

வணக்க ஸ்தலங்கள் கூட கொலைக்களமாக இன்று மாறிவிட்டன என்று அப்போது திருமதி பண்டாரநாயக்கா கூறினார்.

ஆயுதப்படைகள் வடக்கு-கிழக்கு யுத்தத்தில் ஈடுபட்டுள்ளபடியால் மக்களுக்கு போதிய பாதுகாப்பு வழங்க முடியாத நிலையில் காத்தான்குடிச் சம்பவம் இடம் பெற்றுள்ளது என்றும் திருமதி பண்டாரநாயக்கா சொன்னார்.

அப்பாவி மக்களுக்குப் போதிய பாதுகாப்பு அளிக்கப்படவில்லை என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம். பியான ஜனாப் எம். எச். எம். அஷ்ரப் சொன்னார்.

சபை கூடியதும் பத்து ஈரோஸ் எம். பிக்களின் இராஜினாமா பற்றி சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச். முகம்மது அறிவித்தார்.

(ஒ-எ)

## சாவகச்சேரியில் பலர் காயம்!

யாழ்ப்பாணம், ஆக. 8

சாவகச்சேரி சந்தைப் பகுதியில் நேற்றுக்காலை 9 மணியளவில் ஹெலி ஒன்று திடீர் தாக்குதலை நடத்தியது.

இந்தத் தாக்குதலினால் சந்தைக்கு வந்திருந்த பலர் காயமுற்றனர்.

இந்தச் சம்பவத்தில் இருவர் உயிரிழந்ததாகக் கூறப்பட்டது. ஆனால் அதனை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை.

சந்தை நாளான நேற்று பெருமளவில் கூடியிருந்த மக்கள் மீதே தாக்குதல் நடத்தப்பட்டது கூடியிருந்த மக்கள் கிலிகொண்டு நாலாபுறமும் ஓடினர்.

(உ-5-10)

## நாவற்குழியிலும் தாக்குதல்

நாவற்குழியில் இருந்த-தனியாருக்குச் சொந்தமான-இறால் பதனிடும் தொழிற்சாலை ஒன்றின் மீதும் நேற்று விமானத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதனால் தொழிற்சாலையில் இருந்த பல வாகனங்கள் சேதமுற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

(உ-9)

## கொழும்பில் இந்து ஆலயத்தை தாக்க முஸ்லிம் குழு முயற்சி

கொழும்பு, ஆக. 8

கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் உள்ள இந்து ஆலயம் ஒன்றின்மீது முஸ்லிம்களைக்கொண்ட கோஷ்டி ஒன்று தாக்க முற்பட்டதாகவும் –

அந்த சமயம் ஆலயச் சுற்றாடலில் வைத்து இருவர் கத்திக் குத்துக்கு இலக்கானதாகவும் நேற்றிரவு பி.பி.சி அறிவித்தது.

இச்சம்பவங்களை அடுத்து இந்து ஆலயங்களுக்கு விசேஷ பாதுகாப்பு வழங்கப்பட்டு வருகிறது.

ஆயுதம் தரித்த பொலீஸார் ஆலயச் சுற்றாடலில் சந்தேகத்துக்கிடமான குழுக்களைத் தடுத்து நிறுத்தி விசாரணை நடத்துவதில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பொலீஸ் வாகன ரோந்தும் ஆலயச் சுற்றாடல் பகுதியில் அதிகரிக்கப்பட்டு உள்ளது.

[ஒ-எ]

## அகதிகளை ஏற்றிச் சென்ற ராணுவ வாகனம்

யாழ்ப்பாணம், ஆக 8

ஆலங்கேணி விநாயகர் மகா வித்தியாலயத்தில் தங்கியிருந்த 480 அகதிக்குடும்பங்களை நேற்று முன்தினம் இராணுவத்தினர் வாகனங்களில் ஏற்றிச் சென்றதாகச் சொல்லப்படுகிறது.

இந்தப் பாடசாலையில் இயங்கிவந்த அகதிமுகாமைஇடம் மாற்றவேண்டும் எனக்கூறியே இராணுவத்தினர் அகதிகளை ஏற்றிச்சென்றனர் என்றுதெரிவிக்கப்பட்டது.

[உ-9]

## மா கப்பல் வருகிறது

யாழ்ப்பாணம், ஆக. 8

திருகோணமலையில் இருந்து மாவுடன் வந்த கப்பல் நேற்றுக் காலை முல்லைத்தீவை அடைந்தது.

அங்கு மாவை இறக்கிவிட்டு பருத்தித்துறைக்கு வரும்.

யாழ் - மாவட்டத்துக்கு 500 தொன் மா கொண்டுவரப் படுவதாக செயலக அதிகாரி ஒருவர்தெரிவித்தார்.

(ஒ-3)

## அவ்ரோவிலிருந்து நேற்று பிரசுரங்கள் வீசப்பட்டன!

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 8

நேற்று மாலை 5.15 மணியளவில் யாழ். நகரத்தையும் அதன் சுற்றுப் புறங்களையும் வட்டமிட்ட ''அவ்ரோ'' விமானம்,பிரசுரங்களை நாலா திக்குகளிலும் வீசியது.

''தினகரன்'', ''டெயிலி நியூஸ்'' பத்திரிகைகளில் ஜூன் மாதம் 29 ஆம் திகதி வெளியான கட்டுரைப் பக்கங்களை அப்படியே மறுபிரசுரம் செய்த (''ரீபிறிண்ட்'' எடுத்த) பத்திரிகையளவு பிரசுரமே (மொத்தம் 4 பக்கங்கள் - தமிழிலும், ஆங்கிலத்திலும்)விமானத்திலிருந்து வீசப்பட்டன.

''எல். ரி. ரி. ஈ. பயங்கரவாதிகளின் மாபெரும் துரோகம்'', ''இந்திய அமைதி காக்கும் படையின் படுகொலைகள் - இது இன ஒழிப்பு அல்லவா?'' என்ற இரு கட்டுரைகள் அந்த நான்கு பக்கங்களிலும் வெளியிடப்பட்டுள்ளன.

[அ]

## ஜெயலலிதா பலம் குறைகிறது

சென்னை, ஆக. 8

ஜெயலலிதாவின் தலைமையிலான அ. தி. மு. கவில் இருந்து மேலும் ஒரு எம்.எல்.ஏ. விலகி திருநாவுக்கரசு தலைமையிலான அ. தி. மு. கவில் நேற்றுச் சேர்ந்தார்.

இதனைத் தொடர்ந்து ஜெயலலிதாவின் பிரிவின் எம். எல். ஏக்கள் பலம் 24 ஆகக் குறைந்தது. திருநாவுக்கரசு பிரிவின் பலம் 5 ஆக அதிகரித்தது.

இதன்காரணமாக தமிழக சட்டசபையில்பிரதானஎதிர்க்கட்சி அந்தஸ்தை இந்திரா காங்கிரஸ் பெறஉள்ளது.

(ஒ-எ)

## சவூதி - ஈராக் மோதும்?

ரியாத், ஆக 8

ஈராக்கின் தாக்குதலைச் சமாளிக்க சவூதி அரேபியா தனது முப்படைகளையும் உஷார் நிலையில் வைத்துள்ளது.

குவைத் எல்லைப் புறத்தில் ஈராக் படைகளுக்கு நேருக்கு நேராக சவூதி அரேபியா தனது படைகளை நிறுத்தியுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. ஆனால் தேவையானால் சவூதி அரசுக்கு படை உதவி வழங்க அமெரிக்கா தயாராக உள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை—

செங்கடல் துறைமுகத்துக்கு சவூதி பாலைவனம் ஊடாக செல்லும் ஈராக் எண்ணெய்க் குழாயை சேதப்படுத்தினால், சவூதி அரேபியாவைத் தாக்கப் போவதாக பக்தாத் அரசு நேற்று அறிவித்தது.

இந்தக் குழாயினூடாகவே ஈராக் உற்பத்தி செய்யும் எண்ணெயில் 90 வீதம் ஏற்றுமதிக்காக துறைமுகத்துக்குச் செல்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## நிவாரணம்

பருத்தித்துறை, ஆக. 8

புலோலிப் பகுதிக்கு இடம் பெயர்ந்து வந்துள்ள திருமலை அகதிகளுக்கு வடமாராட்சி பயிலுநர் ஆசிரியர் சங்கம் நிவாரண உதவிகளை வழங்கியது.


## ஷிப்றா அறிவித்தல்

நாட்டில் தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக மறு அறிவித்தல் வரை எமது அலுவலக வேலைகள் இடை நிறுத்தப்பட்டுள்ளன என்பதனை வாடிக்கையாளருக்கு அறியத்தருகின்றோம்.

நிர்வாகத்தினர்.

(C/5156)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி செ. சிங்காரவேல்

(ஓய்வுபெற்ற ஆசிரியை: யாழ். மத்திய கல்லூரி)

திருமதி செல்வமணி சிங்காரவேல் 31 - 07 - 90 அன்று காலமானார். இவர் திரு. ஆ. சிங்காரவேல் (டாக்டர் William Harvey Memorial Hospital, & Stanly Eye Surgery) அவர்களின் அன்பு மனைவியும், சிவகுமாரன் (Thurairajah Associates Private Ltd) உருத்திரகுமாரன் (கொழும்பு), காலஞ் சென்ற செல்வகுமாரன், திருமனைச் செல்வி, நந்தகுமாரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சோதிமலர், கிரிஷாந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் க. துரைரத்தினம் அவர்களின் அன்புச் சகோதரியுமாவார்.

இவரின் ஈமக்கிரியை 01- 08- 90 இல் வல்வெட்டித்துறை ஊறணி மயானத்தில் நடைபெற்றது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:

சி. சிவகுமாரன்

புதுவளவு,
வல்வெட்டித்துறை.

(சி/5154)

### காத்திகேசு சின்னத்துரை

(ஆனந்தம்)

கோப்பாயை வசிப்பிடமாகக் கொண்ட காத்திகேசு சின்னத்துரை (இளைப்பாறிய E. O. A யாழ். கச்சேரி) அவர்கள் காலமானார். இவர் அரசு (மலேசியா), காலம் சென்ற நடராசா, காலம் சென்ற சணவதிப்பிள்ளை, காலம் சென்ற பொன்னம்பலம், வள்ளியம்மை ஆகியோரின் அன்புச் சகோதரரும் இராஜசபை (இளைப்பாறிய ஆசிரியர்) இன் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 05 . 08 . 90 ஞாயிற்றுக்கிழமை மாலை 3 . 00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

கோப்பாய் தகவல்:

(13627) க.இராஜசபை,

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 08-08-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org